**செய்தி வெளியீடு எண்: 564** **நாள் : 07.11.2014**

**பத்திரிக்கைச் செய்தி**

குடும்ப அட்டையில் மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழுவதும் வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்ட முகாம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன்படி உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னையில் 16 மண்டல பகுதிகளில் மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு இணைப்பில் குறிப்பிட்டுள்ள மையங்களில் நவம்பர் 2014 மாதத்திற்கான மாதாந்திர பொது விநியோகத் திட்ட குறைதீர் கூட்ட முகாம் 08.11.2014 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல்படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவு துறை மற்றும் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். அப்பகுதியை சுற்றி உள்ள குடும்ப அட்டைதாரர்கள் குடும்ப அட்டைகளில் பெயர், முகவரி மாற்றம், திருத்தம் மற்றும் பொது விநியோக திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் பொது விநியோக திட்ட பொருள்கள் கிடைப்பது குறித்தும் தனியார் துறையில் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் பெறும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது அல்லது தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை இக்கூட்டத்தில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சென்னையில் உள்ள 16 மண்டல பகுதியில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ.எண் | மண்டலம் | கூட்டம் நடைபெறும் இடங்களின் பெயர் |
|---|---|---|
| 1 | சிதம்பரனார் | முத்தியால்பேட்டை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி. 83, தம்புச்செட்டி தெரு, சென்னை 600 001 (காளியம்மன் கோவில் அருகில்) |
| 2 | இராயபுரம் | சென்னை மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி, AA திட்டசாலை, எம் பி டி காலனி, புதுவண்ணாரப்பேட்டை, சென்னை 600 081. ( எம் பி டி காலனி அருகில்) |
| 3 | பெரம்பூர் | சென்னை தொடக்கப்பள்ளி, 143, நியூஸ்டிரான்ஸ் சாலை, பட்டாளம், சென்னை 600 012. (ஜி 3 காவல் நிலையம் எதிரில்) |
| 4 | அண்ணாநகர் | சென்னை நடுநிலைப்பள்ளி, 39, சி.பிளாக், பாடசாலை தெரு, எம்.எம்.டிஏ காலனி, அரும்பாக்கம், சென்னை 600 106. (அரும்பாக்கம் தபால் நிலையம் எதிரில்) |
| 5 | அம்பத்தூர் | அரசினர் மேல்நிலைப்பள்ளி. சன்னதி தெரு, மதுரவாயல், சென்னை 600 095 (மதுரவாயல் மார்க்கெட் பஸ் நிறுத்தம் அருகில்) |
| 6 | வில்லிவாக்கம் | பி என் இ சி டி காமராஜ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, 2, காமராஜ் ஸ்கூல் ரோடு, தணிகாசலம் நகர், சென்னை 600 110 (குமரன் நகர் பேருந்து நிலையம் அருகில்) |
| 7 | திருவொற்றியூர் | சென்னை நடுநிலைப்பள்ளி, கத்திவாக்கம் நெடுஞ்சாலை, எண்ணூர், சென்னை 600 057. (எண்ணூர் பேருந்து நிலையம் அருகில்) |
| 8 | ஆவடி | கலைமகள் மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி, 2, ராஜராஜன் தெரு, செந்தில் நகர், திருமுல்லைவாயல். (திருமுல்லைவாயல் ரயில் நிலையம் அருகில்) |
| 9 | தி.நகர் | சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, 27, ராஜாஜி தெரு, நுங்கம்பாக்கம், சென்னை/34. (சுதந்திர தினபூங்கா அருகில்) |
| 10 | மயிலாப்பூர் | சென்னை மேல்நிலைப்பள்ளி, பாரதியார் தெரு, தரமணி, சென்னை 600 113. (தரமணி பேருந்து நிலையம் அருகில்) |
| 11 | பரங்கிமலை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, நடராஜன் தெரு, மூங்கில் ஏரி, பம்மல், சென்னை 75. (கிருஷ்ணாநகர் பேருந்து நிறுத்தம் அருகில்) |
| 12 | தாம்பரம் | பீர்க்கன்கரணை பேரூராட்சி அலுவலக வளாகம், பீர்க்கன்கரணை, சென்னை 63. (பெருங்களத்தூர் ரயில் நிலையம் அருகில்) |
| 13 | சைதாப்பேட்டை | அரசு மேல்நிலைப்பள்ளி, 5, திரௌபதி அம்மன் கோவில் 5வது தெரு, வேளச்சேரி, சென்னை 42. (சங்கீதா ஹோட்டல் எதிரில்) |
| 14 | ஆயிரம்விளக்கு | சென்னை நடுநிலைப்பள்ளி, 88, தாணாதெரு, புரசைவாக்கம், சென்னை 7. (புரசைவாக்கம் குளம் அருகில்) |
| 15 | சேப்பாக்கம் | சமுதாயநலக்கூடம், க.எண்.123/3, சிங்கண்ணா தெரு,சிந்தாதிரிபேட்டை, சென்னை 2. (சிந்தாதிரி பேட்டை காவல்நிலையம் அருகில்) |
| 16 | சோழங்கநல்லூர் | சென்னை மாநகராட்சி 183வது வார்டு அலுவலகம், கிழக்கு கடற்கரை சாலை, கொட்டிவாக்கம், சென்னை –600 041. (பாலவாக்கம் பேருந்து நிறுத்தம் அருகில்) |

ஆணையாளருக்காக

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**